










# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 10 5.03.2025



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# உள்ளே....

# படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. ஸ்ரீதேசிகோபதேசங்கள்-3
2. தேரேந்தூர் ஆண்டவனின் முத்துக்கள்
3. பரமபதசோபானத்தில் 9
4. ஸ்ரீஸப்தத்தின் ஆறு பொருள்கள்
5. ஸ்வாமி தேசிகனின் “சிஷ்யனை பற்றிய முத்துக்கள்”

*********



# 1. ஸ்ரீதேசிகோபதேசங்கள்-3

## மலர் 9ம் தொடர்ச்சி

17. சிறிய கண்ணாடியானது பெரிய உருவை காட்டுவது போலே திருமந்திரமானது வேதம், இதிஹாசம், புராணம் என அனைத்தையும் விளக்குகிறது. எட்டெழுத்து மந்திரத்தால் எட்டாதது (அடையாதது) எதுவுமில்லை.

18. திருமந்திரமானது விலைமதிப்பற்ற ரத்தினத்தைக் தன்னுள்ளே வைத்துள்ள மாணிக்கப் பேழையைப் போன்றது.

19. 'க' என்றால் பிரம்மதேவனின் பெயர். 'ஈசன்' என்றால் பரமேஸ்வரனுக்கு பெயர்.

'க, ஈச: பிரம்மனையும், பரமசிவனையும்' படைத்ததினால், மஹாவிஷ்ணு 'கேசவன்' என்று அழைக்கபடுகிறான். ஆகவே, அவனே மேலான பரம்பொருள். இது பரமேஸ்வரன் சொன்ன வாக்கியம்.

20. எக்காரணம் கொண்டும் ஆசார்யன் உபதேசித்த மந்திரங்களை வெளிப்படையாக கூறக்கூடாது. ஆனால் எக்காரணம் கொண்டும் ஆசார்யன் பெருமையை வெளியிடாமல் இருக்கக் கூடாது. இந்த முறையை மாற்றி, ஆசார்யன் உபதேசித்த மந்திரங்களை வெளியிடுபவனும், ஆசார்யன் பெருமையை வெளியிடாமல் இருப்பவனும் கட்டாயம் நாசத்தை அடைவான்.

21. ஒரு காகம், ஒரு அரக்கன் விபீஷணன், பாஞ்சாலி, பெரும் பாவியான க்ஷத்திரபந்து, தேவர்கள், மனிதர்கள், யானை, வேடுவன் குகன் என ஜாதி, மதம், மொழி, இனம் பாகுபாடின்றி பகவான் மோக்ஷம் அளித்ததை குருவிடம் கற்று உணர்ந்தால், பகவானின் கருணை நமக்கு புரியும்.

22. ஒரு அழகிய பள்ளியறையில் சுகமாக உறங்க நினைக்கும் பொழுது, மேல் விதானத்தில் ஒரு பாம்பு இருந்தது என்றால் உறக்கம் வருமா? அதே போன்று தான். நாமும் ஸம்ஸாரம் என்னும் இந்த கொடிய பாம்புடன் ஒரே அறையில் வசித்து வருகிறோம். இது என்ன விந்தை ?

23. ரஸாயனம் (Tonic & Syrup) முதலில் நோயை நீக்கி, பின் வலிமையையும் உண்டாக்கும். அது போல, பக்தியானது சரணாகதி செய்ய விரும்புவோருக்கு முதலில் சரணாகதியை செய்விக்கும் மருந்தாகவும், சரணாகதி செய்த பின் அந்த பக்தியே சிறந்த பொழுது போக்காகவும் விளங்குகிறது.

24. தாகமெடுப்பவனுக்கு ஸமுத்ரஜலம் உபயோகமற்றது போலே சாமானியர்களுக்கு கடினமான சாஸ்திரம் பயனற்றது. மேகமானது கடல் நீரை மழையாக பொழிவது போலேஆழ்வார்கள் ஸாரமான அர்த்தத்தை பாசுரங்களில் அளித்துள்ளனர்.

25. தன்னிடம் மிகுந்த காதல் கொண்ட கணவனை பதிவிரதையான மனைவி அனுபவிப்பதை போன்றும், நெடுநாள் தவமிருந்து பிறந்த குழந்தையின் இடத்தில் தாயார் மிகுந்த பாசம் வைப்பது போன்றும், நாம்

(அர்ச்சாவதாரத்தில்) ஆலய விக்ரகங்களில் பெருமாளை மகிழ்ந்து கொண்டாடி அனுபவிக்க வேண்டும்.

26. பதிவிரதையான ஸ்த்ரீ ஏனைய மனிதனை மனதாலும் நினையாது தன் கணவனையே தெய்வமாகக் கொண்டிருத்தல் போலே, சரணாகதி செய்தவர்கள் ஸ்ரீமந்நாராயனனையே வழி பட வேண்டும்.

27. உலகில் அதர்மம் தலை எடுக்கும் போது, பகவான் பல்வேறு திருமேனிகளுடன் பற்பல அவதாரங்களைச் செய்து உலகில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுகிறான்.

28. பகவானை வழிபடுவதற்கு வயது குலம் கல்வி எதுவும் ஒரு தடை இல்லை. த்ருவன், ப்ரஹ்லாதன், கஜேந்திரன், குசேலன் இவர்களின் கதையினை படித்தால் அந்த பெருமை தெரியும்.

29. ஆசார்யரின் உபதேசப்படி நாம் கூறும் மந்திரங்களை, நமக்கு அர்த்தம் முழுவதுமாகத் தெரியவில்லை என்றாலும் பெருமாள் ஏற்று நமக்கு அருள் புரிகிறான். எப்படி ஒரு பாலகன் பவதி பிக்ஷாம் தேஹி' என்று அர்த்தம் புரியாமல் கேட்டாலும் செல்வந்தர் ஆஹாரம் அளிப்பது போல் பெருமாளும் நாம் அர்த்தம் புரியாமல் கூறும் மந்திரங்களை ஏற்கிறான்.

30. துன்பம் விளைவிக்கக் கூடிய கொடிய விஷமானது சிறிதளவு போதுமானது. ஆனால் அந்த விஷத்தை முறிக்க, சாப்பிடும் மருந்து பல மணி நேரம் கழித்தே அவனைக் காப்பாற்றுகிறது. அது போல, **ஸதுபதேசம்** பலிக்க சில காலம் ஆகும். மாசுபடுத்த ஒரு நிமிடம் போதும். ஆனால் அந்த மாசினை அகற்ற பல மணி நேரம் தேவை. இது போலத் தான் ஸதுபதேசம் பலிக்க பல நாட்கள் ஆகின்றன.

31. பசியில் இருக்கும் ஒருவன் 'எவ்விதம் அரிசி விளைகின்றது ?' என்பதை பற்றி கவலை கொள்ளாமல், சாப்பிடுவதில் கவனம் செலுத்துகிறானோ, அது போல பண்டிதர்களுக்குத் தெரிந்த சாஸ்திர நுணுக்கங்களை அறிய முற்படாமல், நாம் அறிய வேண்டிய முக்கியமான தத்துவங்களை மட்டும் ஆசார்யர் மூலம் அறிந்தால் போதும்.

*******************************************************************************************



## 2. தேரேந்தூர் ஆண்டவனின் முத்துக்கள்

ஒரு சமயம் கடிகாரம் ஐந்து அடித்தது. சிஷ்யர்களில் ஒருவரிடம் கடிகாரம் என்ன சொல்கிறது ? என்றாயிற்று ஸ்ரீமத் ஆண்டவன்.

அஞ்சாகிறது என்றார் அவர்.

"அஞ்சு" என்று சொல்கிறது என்றார் ஆண்டவன். அஞ்சு = பயப்படு.

நல்ல கார்யம் செய்ய நேரம் குறைந்து கொண்டே வருகிறது. காலம் போய் விட்டால் என்ன செய்வது? என்று பயப்படு என்று கடிகாரம் ஞாபகப் படுத்துகிறது என்றார் ஸ்ரீமத் ஆண்டவன்.

எதிலும் நல்ல விஷயத்தையே பார்க்கும் ஸ்வபாவம் ஸ்ரீமத் ஆண்டவனுக்கு.

## 3. பரமபதசோபானத்தில் 9-படிகளாவன:-

(1) தத்துவங்கள் முதலியவற்றை வகுத்து அறிதல்

(2) மனந்தளர்தல்

(3) உலகஸுகங்களில் ஆசையறுதல்

(4) தம் பாபங்களின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரகாநுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல்

(5) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்வதற்குக் காரணமான உபாயத்தை அநுஷ்டித்தல்

(6)இச்சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்

(7) அர்ச்சிராதிமார்க் கத்தால் செல்லுதல்

(8) ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்யலோகத்தைச் சேர்தல்

(9) அங்கு ஸர்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அனுபவித்து அந்த ஆநந்தத்திலேயே மூழ்கிக்கிடத்தல்.

இந்த 9 விஷயங்களையும் இப்பிரபந்தத்தில்,பரமபதசோபானத்தில் சுருக்கியும், ரஹஸ்யத்தில் மிக விரித்தும் அருளியிருக்கிறார் ஸ்ரீ தேசிகன்



# 4. ஸ்ரீ: ஸப்தத்தின் ஆறு பொருள்கள்

ஸ்ரீ: ஸப்தத்தின் ஆறு பொருளை அழகாக சித்திரித்து இருக்கிறார் ஸ்வாமி. பிராட்டி செய்யும் உபகாரங்கள் தான் என்னே!

ஸ்ரீ: என்கிற பதம் ஆறு வகைப் பொருள்களால் விளக்கப்படுகிறது.

1)**ஸ்ரீயதே :** உஜ்ஜீவிக்க ஆர்வமுள்ள ஸகல ப்ராணிகளாலும் அடையப்படுகிறாள்.

2) **ஸ்ரயதே :** அடைகின்றாள். தன்னை அடைந்தவர்களை உய்விக்கும் பொருட்டு தானே ஸர்வேஸ்வரனை அடைகிறாள்.

3) **ஸ்ருணோதி** : கேட்கிறாள். சேதநர்கள் தங்களை ஸர்வேஸ்வரனின் திருவடிகளில் சேர்க்கவேண்டும் என்று சொல்கின்ற பயம் கலந்த வார்த்தைகளைச் செவி மடுக்கின்றாள்.

4) **ஸ்ராவயதி** : ஈன ஸ்வரத்தோடு சேதநர்கள் கூறும் வார்த்தைகளை எம்பெருமான் கேட்க வேண்டுமாய் அவனிடம் விண்ணப்பிக்கிறாள்.

5) **ஸ்ருணாதி** : எம்பெருமாளை அடைவதற்கு தடையாக உள்ள அனைத்துக் கர்மாக்களையும் போக்குகின்றாள்.

6) **ஸ்ரீணாதி**: தன்னை அடைந்தவர்களை கைங்கர்ய ப்ராப்திக்கு ஏற்றவாறு இருக்கும் நிலையினைத் தந்து பக்குவப் படுத்துகின்றாள்.

**பிராட்டியின் புருஷகார பலத்தினால் நாம் எம்பெருமானை சுலபமாக அடைந்து பேரானந்தம் அடையலாம் என்பது பொருள்.**



## 5. ஸ்வாமி தேசிகனின் "சிஷ்யனை பற்றிய முத்துக்கள்"

ஒரு சிஷ்யனானவன் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும். அவனுக்கென்று சில பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன.

1. எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆசார்யனிடத்தில் பக்தி குறையாமல் இருக்கவேண்டும்.

2. ஆசார்யன் தமக்குச் செய்த பேருபகாரத்தை எப்பொழுதும் நினைவிற் கொள்ளவேண்டும். ஆசாரசீலனாக இருக்கவேண்டும்.

3. பரிபூர்ணமாக ஆசார்ய பக்தியுடன், ஆசார்யனின் குணங்களை எப்பொழுதும் ப்ரகாஸிப்பித்துக் கொண்டிருக்க வேண்டும்.

4.ஆசார்யனின் குடும்பத்தினருடன் ப்ரபத்தியோடு இருக்கவேண்டும்.

5. கௌதமர், ஆபஸ்தம்பர் ஆகிய மஹரிஷிகளின் வார்த்தைகளுக்கேற்ப ஆசார்யனையும் பகவானைப் போலவே உபாஸிக்க வேண்டும். ஆசார்யனுக்கு க்ருத்யனாகவும், த்ரோஹம் செய்யாமலும் இருக்க வேண்டும். 'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாசகப்படி எப்பொழுதும் எக்காலத்திலும் ஆசார்யனிடத்தில் நன்றி மறவாமல் இருக்க வேண்டும்.

6. தத்வங்கள் எல்லாம் தகவால் அறிவித்தவன் ஆசார்யன். சிஷ்யன் உஜ்ஜீவித்து நற்கதி அடையவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் ஆசார்யன் தத்வங்களை நன்கு விளக்கி உணர்ந்து கொள்ளுமாறு உபதேஸி த்தான். எனவே, அவர் உபதேஸித்தப்படி, தானும் நடந்து, தான் மற்றவர்களுக்கு உபதேதேஸிக்கின்ற பொழுதும் ஒழுங்குநெறி முறைகளை நன்கு கடைப்பிடிக்கவேண்டும்.

7. ஆசார்யன் ஏற்றி வைத்த ஜ்ஞான தீபத்தால் சிஷ்யனின் அகவிருள் அனைத்தும் நீங்கியது. எவ்விதமான ப்ரத்யுபகாரத்தையும் எதிர்பாராமல் இதனைச் செய்கின்ற ஆசார்யனுக்கும் அவர் செய்த உதவிக்கும் என்ன கைம்மாறு செய்யமுடியும். இப்பேருபகாரத்திற்கு வையகமும் வானகமும் ஈடாகுமா? ஒருக்காலும் இல்லை. இதற்கான கைம்மாறினை மாயாவியான பகவானாலும் சொல்லவும் காணவும் முடியாது.

8. ஆசார்யனின் பெருமைகளையும் புகழையும் ஸதா ஸர்வகாலமும் த்யானித்தாலும் அவர்பால் நாம் கொண்ட பேரன்பிற்கு போக்குவீடாக இச்செய்கைகள் இருக்கலாமேயன்றி அவர் செய்த மஹோபகாரத்திற்கு ப்ரத்யுபகாரமாக இருக்கமுடியாது. இவையனைத்தும் எள்ளளவும் ஈடாக மாட்டா.

**சிஷ்யர்களிடம் இருக்கவேண்டிய நற்குணங்களை எடுத்துரைத்து அவர்கள் அதன்படி நடந்து தக்க சீலர்களாகத் திகழ வேண்டும் என ஸ்வாமி வாக்கு.**

******************************************************************